**பத்திரிகைச் செய்தி**

**யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம்**

பொதுமக்களுக்கு வழங்கும் சேவையின் வினைத்திறனையும் விளைபயனையும் அதிகரிக்க வேண்டுமென்ற அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினதும் தொலைநோக்கைத் தொடர்ந்து 2017 சனவரி 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமையன்று மு.ப. 10.30 மணிக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு யாழ்ப்பாணத்தில் பிராந்திய கொன்சியூலர் அலுவலகமொன்றைத் திறக்கவுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்டச் செயலகத்தில் அமைக்கப்படவுள்ள கொன்சியூலர் அலுவலகமானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, வட மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், சிறைச்சாலைகள் சீர்திருத்த, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் டி. சுவாமிநாதன், கைத்தொழில் மற்றும் வர்த்த அமைச்சர் றிசாத் பதியுத்தீன் மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஷ்வரன் ஆகியோர்களின் பங்குபற்றுதலுடன் திறந்து வைக்கப்படும்.

இப்பிராந்திய அலுவலகம் முன்னர் கொழும்பிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிலுள்ள அலுவலகத்தினால் மட்டுமே மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு கொன்சியூலர் சேவைகளை வழங்கும்.

இப்பிராந்திய அலுவலகத்தினால் வழங்கப்படும் சேவைகள் பிறப்பு, திருமண, இறப்பு சான்றிதழ்கள் மற்றும் வெளிநாடுகளினால் மக்களின் பயன்படுத்துகைகளுக்கான கல்விச் சான்றிதழ்கள் உண்மையானவை என உறுதிப்படுத்தல் மற்றும் வெளிநாடுகளில் தனித்து விடப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு உதவி வழங்குதல் வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்து அங்கு பணிபுரியும் வேலையாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரணமும் நட்டஈடும் வழங்குதல் மற்றும் வெளிநாடுகளில் இறந்தவர்களின் பூதவுடல்களை இலங்கைக்கு மீட்டனுப்புதல் ஆகிய பல்வேறு சேவைகளை வழங்கும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிராந்திய கொன்சியூலர் அலுவலகம்
மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்

தொழிற்படு நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை
மு.ப. 8.30 மணியிலிருந்து
பி.ப. 4.15 மணிவரை

தொலைபேசி : 0094 212215970
0094 212215972

மின்னஞ்சல் :- jaffna.consular@mfa.gov.lk

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு
கொழும்பு
2017 சனவரி 24 ஆந் திகதி